யாழ்ப்பாணத்து வைத்தியதர்ல் வெளியீடு—ச.

உ

சிவமயம்.

வைத்தியத்தெளிவு
அனுபந்தத்துடன்.

செட்டியார்இயற்றியது.



இஃது.

யாப்பாணத்து ஏழாலை

சுதேச வைத்தியர்

ஐ. பொன்னையபிள்ளையால்

பரிசோதித்து

சுன்னுகம்

திருமகள் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

பிரமோதூத—ஐப்பசி.

1930.

உரிமைபதிவு செய்யப்பெற்றது.

நூன்முகம்.

"செட்டியார் இயற்றிய வைத்தியத்தெளிவு" என்று இந்நூற் பிரதி ஒன்றின் முகப்பிற் காணப்படுகின்றது. வைத்திய விளக்கம் இயற்றிய இருபாலைச் செட்டியாரே இதனையும் இயற்றியவராகும் என்றுசிலர் கூறுவர். தீவுபக்கங்களில் வசித்த முத்துச்செட்டியாரே இதன்ஆக்கியோன்என்பர்வேறுசிலர். இந்நூல் ஏறக்குறைய500செய்யுட்களையுடையதென்பர். எம்மிடம் கிடைத்துள்ள பகுதியை அச்சிட்டு வெளிப்படுத்தினேம். மிகுதியை வைத்திருப்போர் தயைகூர்ந்து எமக்கு அனுப்பிவைப்பராயின் உடனே வெளிப்படுத்தப்படும். ஆயின் வைத்தியநூல் வைத்திருப்போருள் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பதின்மரும் தம்மிடம் உள்ள ஏடுகளைப் பிறருக்குக் காட்டவும் உடன்படாத உயர்ந்த மனப்போக்கினை உடையார்என்பதை நாமறிவோமாயினும், பொதுநலம் விழையும் புண்ணியர் சிலர் அத்திபூத்ததுபோல் அங்குமிங்கும் இருப்பதையும் கண்டோமாதலால் அத்தகையோரை உன்னியே அங்ஙனம் கூறினேம். ஏனையோர் (கொடுக்கமனமில்லாதோர்) அதற்காக எம்மீது கோவங்கொள்ளாதிருப்பாராக.

முன் எம்மால் வெளியிடப்பெற்ற வைத்திய விளக்கம், பராசசேகரம் 1ம் 2ம் பாகங்கள் என்னுமிவைகள் போதிய அளவு விலைப்படவில்லை. ஆதலால் அவற்றுல் எமக்கு மிக்க பொருள் நட்டமே நேர்ந்துவிட்டது. இப்பொழுது அச்சிலிருக்கும் பராசசேகரத்து மூன்றும் பாகமாகிய சுரரோக சன்னிரோக நிதானங்களும், சொக்கநாதர் தன்வந்திரியம், வைத்தியசிந்தாமணி முதலியவைகளுமாகிய இவற்றை விரைந்து முடித்தற்கண் ஊக்கமில்லாதொழிந்தமைக்கும் அதுவே காரணமாகும். பரோபகாரசிந்தைபடைத்த உத்தமர்கள் பலர் எமது இந்த நன்முயற்சியை ஆதரிக்க முன்வருவார்களாயின் இவற்றோடு இன்னும் பல அரிய நூல்கள் காலத்தில் வெளிவருவதற்கு ஏதுவாகும். அங்ஙனமாதற்கு ஏல்லாம் வல்ல இறைவன் திருவடிகளை வழுத்துவோமாக.

ஏழாலை,
பிரமோதூதவருஷப்பசிமீ } ஐ. பொன்னையா.

சிவமயம்.

வைத்தியத் தெளிவு.



காப்பு.

ஆதி யந்த மிலாத வருட்பெருஞ்
சோதி யாயட்ட மூர்த்தி சொரூபமாய்
ஈத மாயெப் பொருட்கு நடுவுமம்
போத மாஞ்சிவன் பொன்னடி போற்றுவாம். க

ஆயுள்வேத வரலாறு.

ஆயுள் வேதத்தை யாதியி லத்தனர்
மாயா சத்தி மனதி லுரைத்தனர்
மாயா சத்தி மறுபடி சித்தர்க்குக்
காய மாந்தரைக் காக்கக் கழறினுள். உ

மருத்துவரியல்பு.

சுத்த சைவத்திற் மேன்று மருத்துவர்
சித்தம் வாக்குச் செயல்புரி தேகுத்தால்
நித்தங் கர்த்தணை நேசித்துப் பூசித்துப்
பத்தி கொண்டு பவப்பகை வெல்வரே. ங

சலிய னேத்துங் கருத்தி லிருத்தியே
நிலிகொ ணேய்களை நீக்கு மருத்துவர்
கொலைமு தற்கொண்டு கூறிய பாவத்தை
விலக நீக்கி யருளில் விளங்குவார். ச

நாடிமூன்றின் நடைவேறுபாடு.

கோழி யன்னங் குயினடை வாதமாம்
தாழு மட்டை தரையாமை பித்தமாம்
பாழிப் பாம்பினம் பாயுந் தவளைபோல்
கோழை சேடங் குழற நடக்குமே. நி

வாதத்தின்குணம்.

வாத வன்மை வழுத்துவண் மாந்தர்க்குத்
தாது நாசமாய்ச் சந்துகால் நோவதாம்
தீது செய்மலஞ் செவ்வையாய்ப் போகாது
ஓது நீர்மல மூரந்துக் கறுக்குமே. சு

பித்தத்தின் குணம்.

பித்தந் தானும் பிதற்றித் தலைவீசும்
சுத்தி பண்ணிச் சரீரம் வரட்சியாம்
சித்தம் பேதமாய்த் தீனை மறப்பிக்கும்
சுத்த நீர்மலஞ் சுட்டுக் கடுத்திடும். ஏ

சிலேற்பனத்தின் குணம்.

சேடச் செய்கையைச் செப்பின் மயக்கமாம்
கூடும் வேர்வை கபமாய்க் குரல்கம்மும்
நாடு மூச்சு நவில்வா யினித்திடும்
வாடி மாந்தர் மலநீர் வெளுக்குமே. அ

தோந்தத்தில் வாதம் கோபித்தால் குணம்.

நீருறு வாத நாடி நின்றதிற் கோப மானால்
பாரினி லெவர்க்கும் வாயு பற்றிடு மந்த மாகும்
வேரிசேர் குழலாய் வாதம் விரிந்ததி லெதிர்த்து நின்றூற்
கூருறு சன்னி வந்து கூடிடு மூன்று நாளில். ஐ

வாதசுரம்.

வாதஞ் சேர்சுரம் வாட்டி வருத்தியே
சீதங் கொண்டுபின் சிந்தை கலங்கிடும்
சாதக் நீக்கிடுஞ் சத்தித்து நெஞ்சுமோகாம்
பாதஞ் சந்து பருக்க வுளையுமே. கo

பித்தசுரம்.

பித்தஞ் சேர்சுரம் பேதமாய் வாய்கைக்கும்
சத்தி பேதியுஞ் சாரும் வெதுப்பிடும்
மெத்த நீரு மலமுஞ் சிவந்துபோம்
மத்த பித்த மயக்கச் சுரக்குணம். கக

சிலேற்பனசுரம்.

சேடஞ் சேர்சுரந் தேக மழன்றிடும்
காடும்வோ்வையு நாவு மினித்திடும்
கூடு நெஞ்சுநோங் கோழையு மூச்சுமாம்
வாடுஞ் சோம்பு மலசலம் வெண்மையாம். கூ

வாததோஷம்.

மூன்று வாதத்தின் மொய்த்திடு தோஷந்தான்
சிந்தை கெட்டுச் செவியு மடைத்திடும்
மந்த மாகி மலஞ்சலங் கட்டியே
சந்து நொந்துபின் னூது குறையுமே. கஙூ

பித்ததோஷம்.

பித்த தோஷப் பெலத்தை யுரைத்திடில்
சத்தி மேற்படுங் தாகங் கதித்திடும்
மெத்தப் பேதியாய் மெய்யு மெலிந்திடும்
சுத்தக் கண்கள் சுறுக்கிற் சிவக்குமே. கசி

சிலேற்பனதோஷம்.

ஐய தோஷத் தடைவை யுரைத்திடில்
வெய்ய சுரச்சல் மிகுந்து வெதும்பிடும்
மெய்வெ ளுத்து வியர்வை மிகுநியாம்
கைக டுங்கிடுங் காறுஞ் சறளியே. கரு

விஷசுரம்.

சுரமேதோன்றி வீக்கமுண்டாய்ச் சோரும் கைகால்சலமடைக்கும்
திரமாய்ப் பேச வொட்டாது தீனுங் குறைந்து துயில்குறையும்
சரமுந் தங்கித் தாகமுண்டாந் தாக்கு மிரும லிடையிடையே
ரமார் விஷத்திற் சுரமெனமே யுரைத்தா ருண்மை யுலகோர்க்கே.

சோர்வாதம்.

சோரும் வாதத்திற் மேற்ந்த முரைத்திடில்
கீரி னோடு மலமூந் தடைப்படும்
பாரின் மாந்தர்மெய் பக்கம் விறைத்திடும்
சேரு நாவினைச் செப்பவி டாதுகாண். கஎ

சீதவாதம்.

சீத வாதத்தின் செய்கையைச் செப்புவன்
வாத மெத்தி வலுத்திடுஞ் சேடமும்
ஓது நாக்கு மூளத்துத் தடித்திடும்
பாதந் தானும் பருத்துப் பொருமுமே. கஅ

புழுமேய்ச்சல்.

பிடரி யுச்சி பெருக்கப் புழுவெட்டி
அடருங் கூந்த லதிகங் குறைந்திடும்
தொடரு மண்டையிற் மேலு முரிந்துதான்
விடம தாகப்பின் மெய்யும் வெதும்புமே. கக

துடைவாழை.

தொற்றித் தோன்றுந் துடைவாழை செய்குறி
பற்றிக் கான்மேற் பருக்கத் திரண்டுதான்
முற்றி நொந்து முடக்கி மடக்கிடும்
கற்ற பேர்கள் கருத்தாய்க் கழறினர். ௨0

வாயுத்தொந்தம்

சொல்லும் வாய்வுகள் தொந்தித் திடுங்குணம்
செல்லுஞ் சோற்றைச் செரிக்க விடாதுகாண்
கல்லுப் போலவே மேனி கனத்திடும்
பல்லுக் கிட்டிப் பதைக்க மயக்குமே. ௨௧

மந்தசுரம்.

வாதந்தான் றனித்து நின்று வரிக்கிடும் பந்து போலத்
தீதற வெழுந்து நின்று சிக்கியே மந்தம் பற்றும்
ஏதுவாய்ச் சுரங்க டாமு மிடைவிடா நிற்கு மல்லாற்
தாதுவுங் குறைந்து நின்று தன்னையு மறக்கச் செய்யும். ௨௨

அக்கரசுரம்.

நாக்குத் தடிக்கும் வாய்வெருவு
நயனம் வெறிக்கப் பார்வைதருஞ்
சாக்கங் கொடுக்கு மூடம்பெங்குக்
தங்கா வயிறு தான்கழியும்
போக்குஞ் சரீரம் பேதிக்கும்
பொருமுஞ் சுரமு மிகவுண்டாம்
நீக்குங் காது கேளாது
நிகழு மக்கர சுரமிதுவே. ௨௩

அக்கரக்கண்ணை.

மூசம்பிறங் கரல்பி றங்கை மோதியே மினுமி னுச்சும்
சகம்விழி வெளிறிக் காட்டுந் நஞ்சுண்டாப் போன்ம யக்கும்

மிகமிக வெதுப்பு மூண்டாய் வெடித்தோ வுதடு புண்ணும்
சுகமிலை வருத்தக் தோன்றுஞ் சொல்லுமக் கணியின் வாறே

உட்குத்துப் பிறவீச்சு

நெஞ்சிற் குத்தி நெருக்கும் புறத்தினில்
மிஞ்ச வேர்வைகொண் டேவிக்க றோன்றிடும்
கொஞ்ச நேரத்திற் கொட்டாவி கொண்டிதான்
தஞ்ச மென்று சலிக்கு முடம்புகள். உச

குடல்வலி.

குடல்வ லிக்குங் குணத்தை யுரைத்திடில்
இடர்செய் யும்மல மிறங்கா தொருக்காலும்
சடலம் வேர்வையாய்த் தாகமுஞ் சத்தித்துப்
படப டத்துப் பதறிப்பின் சாவரே. உடு

சத்தி.

சத்தி வந்திடிற் றூகஞ் சருவிடும்
பித்தம் மெத்திப் பெருத்திடும் பேதியும்
சித்த மேங்கித் திடுக்கிடச் சன்னிகள்
வித்த தாக விரைவி லெழும்புமே. உசு

விக்கல்.

விக்கல் செய்குறி வேதம் விதித்திடும்
கக்கல் பண்ணிக் கதித்திடு காகனும்
கக்குந் நாக்கு வரண்டு நடுங்கவே
ஒக்குந் தோஷ மொருங்குடன் றோன்றுமே. உஎ

நடுக்கம்.

நடுக்கஞ் செய்குறி நாட்டி யுரைக்கிறேன்
படுக்கக் கூடாம லேபதைப் புண்டாகும்

கடுக்குஞ் சந்துகை காலும் வலித்திடும்
திடுக்கி டப்பண்ணுந் தீபனம் வேண்டாதே. உஅ

இருமல்.

இருமல் செய்யுங் குணத்தை யியம்புவன்
பெருமூ டம்புப் பெலத்தையும் வாட்டிடும்
உருவைக் காட்டு முயர்வான கண்களும்
கருகி யேயிளைப் பாகிக் கலங்குமே. உக

ஈழை.

ஈழை வந்தா லிரும லதிகமாம்
பீளை கண்ணிற் பெருக்கப் பொருந்திடும்
நீள நெஞ்சு நெருப்பெனச் சூடுண்டாம்
வாழு மாந்தர் மலத்தை வரட்டுமே. உ0

பைத்தியம்.

ஊணு மின்றி யுறக்கமு மின்றியே
காணுங் கண்கள் கலங்கி மயங்கிடும்
வீணில் வார்த்தைகள் விள்ளுவர் மெத்தவே
நாண மின்றி நடப்பர் பைதியம். உக

செங்கண்மாரி.

செங்கண் மாரிநோய் தேகத்திற் றோன்றிடில்
அங்கம் வற்றி யழகு குறைந்திடும்
பொங்கு கண்ணிற் சிவகுதும் பீளையும்
தங்கு நீருஞ் சலித்துச் சிவந்துபோம். உஉ

செங்கண்மாரி மூரிந்தால்.

செங்கண் மாரி மூரிந்திடிற் செப்புவன்
அங்கம் மஞ்ச னிறமாய்க் கருகிடும்
தங்கு நீருந் தடித்துச் சிவந்துபோம்
பொங்கு நோயிது பொல்லாத தென்பரே உஉ

மலக்கட்டு.

மலத்தைக் கட்டுங் குணங்கேளாய்
வாயு மிஞ்சி வயிறுப்பும்
சலத்தை மிகவும் போக்காமற்
றாகங் கொள்ளுந் தலைகனக்கும்
பெலத்த மூச்சு முண்டாகிப்
பேசப் பெலனுங் கெட்டிருக்கும்
நிலத்தி லுள்ள மாந்தர்க்கு
நெடுத்த வாத நேரிடுமே. ௩௪

வீக்கம்.

வீக்கம் வந்தால் விழிவீங்கி
மேனி சற்றே வெளுத்திருக்கும்
தூக்கம் வராது நாவுலருந்
துடைக ளிரண்டு மதைப்பாகும்
வாக்குப் பேச வியலாது
வயிறு விம்மு முடல்கனக்கும்
நீக்கு முணவை யெப்போது
நினைவுங் குறையு நிலைபரமே. ௩௫

கழிச்சல்.

வாதம் மெத்தி வலுத்துக் கழிந்திடும்
போதந் தன்னைப் பொருந்த மயக்கியே
சாத முண்டபின் சத்தியைச் சார்ந்திடும்
சேதம் பண்ணச் சிலேற்பனஞ் சேருமே. ௩௬

படுவன்.

ஏற்க வந்த விழுக்குப் படுவனும்
பார்க்கு ளோர்கள் பதறக் கழிந்திடும்
வேர்க்கு மேனி விறைத்து வெளுத்திடும்
காற்று மூக்கிற் கதிக்க வுதைக்குமே. ௩௭

குட்டம்

நிட்ட மாகவே தேகத்தில் மாந்தர்க்கு
வட்ட மாகத் தடிக்கும் வகையைக்கேள்
கட்ட மாகவே கால்கை குறைந்திடில்
குட்ட ரோகமென் றேவகை கூறலாம் கூஅ

இந்திரகண்டி

இசையு மிந்திர கண்டி யிலக்கணம்
அசையு மேனி யவியலுண் டாகியே
தசைக ளெல்லாக் தழைவு கெடாமலே
விசைகொள் பித்தமு மேவி வளருமே கூக

காந்தி

காந்தி வந்தாற் கலங்கிடுங் கண்கடாம்
வார்ந்து மேனி வடிவைக் குறைத்திடும்
ஏந்து நெஞ்ச மிடிக்கு மிளைத்திடும்
போந்த நாக்குப் பொருமி வெடிக்குமே சo

நயனரோகம்

நாட்டு ளோர்க்கு நயனஞ் சிவந்துபின்
மீட்டு நீர்கள் மிகவும் வெளுத்திடும்
பூட்டிக் கண்கள் பொருந்திடப் புண்ணுண்டாய்
நீட்டிப் பார்வை நிலையுறத் தோன்றுதே சக

உட்டணம்

உட்ட ணத்தி னுரத்தை யுரைத்திடில்
வெட்டை மிஞ்சியே விம்மிக் கடுத்துப்போம்
திட்ட மாகவே தேகம் வெளுத்திடும்
விட்ட மூத்திரம் வெண்மையாய்த் தோற்றுமே சஉ

கல்லடைப்பு

கல்ல டைத்திடுங் காரியங் கேட்டிடில்
பல்லுக் கட்டி மலஞ்சல மாறிடும்
சொல்லுந் தேகத்திற் சோர்வு மிகுந்திடும்
வெல்லும் வாகடர் வேத விதியிதே சஉ

சதையடைப்பு

சதைய டைப்புச் சலத்தைத் தடக்கியே
பதைப தைத்துப் படுக்கப் பதறுவார்
விதையு மேனி விசைவிற் குறைக்குபின்
சிதையு மென்று தெளிந்தவர் செப்பினர் சச

இந்திரியநோய்

மாதர் தம்மை மருவ வலியின்றிக்
காத லாய்மிகக் கண்டு மயங்குவார்
ஆது நீறிச சுடுதியிற் சூழ்ந்துபின்
ஏதஞ் செய்திடி லிந்திரிய நோயதே சரூ

புருடர்புண்

ஆட வர்கட் கடங்கலும் புண்படில்
மீவ்டம் பாறியே மேல்க ளுரிந்திடும்
வீடு விட்டு வெளிப்படக் கூடாமல்
பாடு காட்டியே பங்கப் படுவர்கள் சசு

ஒட்டுப்புண்

கட்டுங் கன்னங் கைமூலக் கபோலத்தில்
முட்டுப் பட்டு முளைத்ததிற் சீயுண்டாய்
கட்டஞ் செய்ய கரர்க்கது காடினல்
ஒட்டி வந்திடு புண்ணென் றுரைப்பரே சஎ

மூலப்பவுந்திரம்

மூலந் தன்னின் முளைக்கும் பவுந்திரம்
காலந் தன்னிற் கடுத்து வெடித்திடும்
சீலு நீருடன் சீக்கிரந் தோன்றியே
கோல மேனி குறைந்து வருந்துமே சஅ

பிளவை

கும்பந் தன்னிற் குடைந்த பிளவைகள்
வம்பு செய்ய வளர்ந்து வலித்திடும்
வெம்பிச் சீயும் வெளியில் மிகுதியாம்
நம்ப வேண்டா நரர்க்கது நாசமே சக

சிலந்தி

வதன மூக்கினில் வந்த சிலந்திகள்
விதனஞ் செய்திடு மேனி மெலிந்திடும்
நிதமு நெற்றியி னீர்கள் பறிந்திடும்
உதர வுந்தி யுரத்துத் தடிக்குமே ரூ௦

அரையாப்பு

அரையிற் கட்டி யரிக்கு மரையாப்பு
விரைவில் வேதனை கொண்டு வெடித்திடும்
திரைகள் போற்சியல் சீக்கிரஞ் சேர்ந்துதான்
புரைய தாய்ப்புழுப் புண்ணிற் பொருந்துமே ரூக

முகசிங்கி

கோசத் தானத்திற் கொப்புளங் கொண்டுதான்
வாசஞ் செய்து வலித்து வருத்தியே
ஆசை யெல்லா மடங்கி யொடுங்கத்தான்
மோசம் பண்ணு முகசிங்கி யென்பரே ரூஉ

யோனிப்புண்

மங்கை யோனி மருவுஞ் சிலந்திகள்
பங்கம் பண்ணிப் பசந்து பரந்திடும்
துங்க மின்றித் துவக்துவ தாறிடும்
சங்கை யின்றிச் சருவு மூடம்பிலும் ருஈ

கரப்பன்

கரப்பன் காணிடிற் கால்கை சொறிந்துதான்
உரத்து மேனியி லொக்க வவிந்திடும்
சிரத்திற் சிகள் திரைபோற் பறிந்துபின்
புரத்திற் ரூவிடும் புண்கள் மணக்குமே ருச

தேமல்

சேரும் தேகத்திற் றேமல் செறிந்திடில்
சீர ழிந்து தினமுந் தினவுண்டாம்
வேர்வை கண்டிடின் மெத்த விதனமாய்ப்
பாரின் மாந்தரைப் பங்கப் படுத்துமே ருடு

படர்தாமரை

படரும் தாமரைப் பண்பைப் பகர்ந்திடில்
அடரு மேனி யடங்கத் தடித்திடும்
கடவச் சற்றுங் தணியாமற் ரூக்கிடும்
விடமதாக விறைக்கும் விரைவிலே ருசூ

வெப்புப்பாவை

வெப்புப் பாவை விபரம் விளம்பிடில்
அப்பு மெய்யி லதிகமுண் டாகியே
ஓப்பி லாத வுதரத்தி லேகட்டிக்
கைப்புக் கொண்டுவாய் காய்ச்சலுண் டாகுமே ருள

கேர்ப்பநீர்க்கட்டு

கேர்ப்ப நீர்க்கட்டுக் கேற்குங் குணங்கள்கேள்
அற்ப வுத்தி யதிகம் பொருமியே
சற்று நேரத்திற் முக மிருந்திடும்
மற்றுந் தோஷம் வகைபுடன் மேன்றுமே ருஅ

கீரைப்பாம்பு

கீரைப் பாம்பிற் குணங்கள் கிளத்துவன்
நீரும் வாயினி லூறுந் நிலேகெடும்
சேருஞ் சத்தி யுறங்கிற் றிடுக்கிடும்
சோரு மேனி துவக்கு வெளுக்குமே நிக

வீக்கந் தோன்றும் விறைப்பும் வலிப்புமாம்
தூக்கஞ் சேர்ந்திடுந் தொண்டை துடித்திடும்
நாக்கும் வாயு மூலருஞ் சுரமூறும்
பாக்கை யிட்டெனப் பல்லே நெரிக்குமே சுo

விஷபேதி மூன்றில்

1-கோம்பன்

கொம்ப னக்கரங் கொள்ளும் படுவனும்
என்ப மூன்றும் விடபேதி யாமிவை
கொம்பன் பேதிக் குணங்குளிர் வேர்வையாம்
துன்பஞ் செய்து சுறுக்கினிற் கொல்லுமே சுக

2-படுவன்

*ஏற்க வந்த விழுக்குப் படுவனும்
பார்க்குள் ளோர்கள் பதறக் கழிந்திடும்
வேர்க்கு மேனி விறைக்கும் விசைவினில்
காற்று முக்கில் கதிக்க வுதைக்குமே சுஉ

* இச்செய்யுள் முன்னும் வந்துள்ளது.

3-அக்கரம்

அக்க ரக்குண மாறுக் கடுப்புடன்
சிக்க லின்றி யிரத்தமுஞ் சீயும்போம்
திக்குந் தாகமுஞ் சேர்ந்திடுஞ் சத்திக்கும்
விக்கி னம்மிலை விலகு மறுநாளில் ௬௩

பத்தியத்திற்காவன

பத்தி யத்திற் குரியப தார்த்தங்கேள்
சுத்த தூதுளை சுண்டைபொன் னாங்கண்ணி
கத்த ரிப்பிஞ்சு கருவாழை யின்பிஞ்சு
அத்திப் பிஞ்சு மவரையின் பிஞ்சுமே ௬௪

நாவி லுருசிக்கு நலமா முருங்கையின்
தாவு பிஞ்சு தகுந்ததக் காளியும்
மாவின் பிஞ்சொடு மாங்காய்ப் பருப்புமாம்
ஆவின் பால்நெய் யாட்டுப்பால் நெய்யுமே ௬௫

சிறிய பயறொடு சேருந் துவரையின்
மறுவி லாத பருப்பு மகிழ்ந்தெடு
நறிய கற்கண்டு நாறுங் கருவேம்பும்
உறுதி கோவை யுலர்த்திய வற்றலே ௬௬

ஏய வறைக்கீரை யினிய சிறுகீரை
மேய சீரகம் மிளகொடு வெந்தயம்
தூய்தா யுப்பினைச் சுத்தியுஞ் செய்திடு
காயு நீரைக் கருதிட நன்கதாம் ௬௭

சாய்ந்த கல்லுண்டை சம்பாவின் றண்டுலம்
ஆய்ந்து கொண்டே யருந்திட நன்கதாம்

தேய்ந்து நோய்களுந் தீர்ந்திடு முண்மையே
வய்ந்து கொள்ளு மருந்து மினிதுமும் கூஅ

பத்தியத்திற்காகாதன

பத்தி யத்திற்கா காத பதார்த்தங்கள்
குற்ற முள்ள புகைக்குடி தாம்பூலம்
தத்து மீனகள் மிருகம் பறவைகள்
ஒத்த பல்லுயி ரூன்களு மூண்ணுதே கூக

கள்ளுச் சாராயங் கைத்திடிம் பாகற்காய்
தெள்ளு மாப்பண்டந் தேங்காய் பழவகை
அள்ளு கஞ்சி யரிவையர் போகமும
எள்ளு மாதி யிகந்திட வேண்டுமால் எடி

சிலப தார்த்தங்கள் சேர்க்கவுங் கூறினேனும்
சிலப தார்த்தங்கள் சேர்க்கக்கூ டாதென்றேமும்
பலப தார்த்தங்கள் பாரின்மே லுண்டுகாண்
குலவ யித்தியர் கூட்டக் குணங்கண்டே எக

அவுடதவகை

நசியம்

சுக்கு விபூதி துரிசு மிளகுடன்
மிக்க திப்பிலி வேம்பின்பிண் ணைக்குமாம்
வைக்குங் கெந்தி வகையள வாகமீவ
தக்க தும்பையின் சாற்றூ லைத்திடே எஉ

நிழலு லர்த்தி நிதானமாய் மாந்தர்க்கு
வளரு மூக்கில் வகைபெற வூதிட
உளமுஞ் சன்னி யொதுங்குமுத் தோஷமும்
சளச ளப்பொடு சார்ந்திடு வாயுவும் எக

காது மந்தங் கண்ணோயும் விலகிடும்
பேதகம் பண்ணிப் பெலத்திடு நீர்க்கோவை
சீரஞ் செய்யுஞ் சிரத்திற் கனப்பும்போம்
வாதஞ் செய்யும் வலிகாச மேகுமே எச

வெந்தயச்சூரணம்

வெந்தய மோமம் வெட்பாலி சீரகம்
சுந்தன மேலந் தக்கவி லாமிச்சு
முந்திரி வற்றல் முதிர்ந்த மதுரமும்
அந்த நெல்லி யளவா யரைத்திடே எஞ

மேல்வி ளம்பிய வெந்தயச் சூரணம்
பாலில் நெய்யிற் பருகு வெருகடி
மூலவாயு முடுக்குங் கிராணிநோய்
ஓல மிட்டிலை யோடும் விரைவிலே எசு

பித்த ரத்தம் பெருத்திடு வெட்டையும்
நித்தங் கத்தி நெருக்குங் கசமதும்
அத்தி வெப்பு மடர்ந்த சுரதோஷம்
உத்த பாலர்க் குறுங்கணை போகுமே எள

சூலி குன்மந் தொடர்ந்திடு சத்தியும்
ஆலத் தாக மடர்ந்த வதிசாரம்
மேலிற் பீனிசம் வேக விருமலும்
கோல மாந்தரைக் கூடாது நீங்குமே எஅ

அட்டசூரணம்

சுக்கு மோதகஞ் சொல்லிரு சீரகம்
தக்க மஞ்சள் மிளகுள்ளி சார்வசம்
பொக்க வெல்லா மிளவறுப் பாகவே
மிக்க சூரணஞ் செய்து வெருகடி எசு

உண்டுவெந் நீர்கு டிக்க வுடன்செரி யாத மந்தம்
வண்டணி குழலி னுளே வயிற்றினிற் பொருமன் மாறும்
கண்டதோ ரன்னந் தண்ணீ ரிவற்றிலே கருத்துக் கொள்ளும்
அண்டருக் கிறைவன் சொன்ன வாயுரு வேத மாமே அ0

பொன்னுவரைச் சூரணம்.

பொன்னி னுவரை பூக்கா யிலைபட்டை
தன்னும் வேருந் தொகைபல மோர்சரி
சொன்ன வைந்தைபுந் தூளாய் வெருகடி
தின்னப் பஞ்சாங்கஞ் சீனக்கற் கண்டுசேர். அக

கரப்பன் மேகங் கடிய கசரோகம்
உரத்த பாண்டு மொடுநீ ரழிவுமாம்
பெருத்த பித்தம் பிரமியம் வெட்டைநோய்
வரட்சி தாகமும் வந்த கிராணியும். அஉ

மாத ருந்தி மருவுந் துவாலியும்
ஓதும் வெப்பு முரத்திடும் வீக்கம்போம்
நாதம் விந்துவு நன்றாய் வளர்ந்திடும்
பேத மூலமும் பின்னக் கிடப்பும்போம். அங

அமிர்தசஞ்சீவிச்சூரணம்.

சீந்தில் சந்த மிலாமிச்சுச் சீரகம்
சார்ந்த வாவரை யைந்துகோ ரோசணை
போந்த வோமம் புரத்துரன் ஞரியும்
வாய்ந்த சாதிக்காய் வாகா மதுரமே. அச

கோட்ட முத்தங் குருசாணி கர்ப்பூரம்
நாட்டி லேலந் கயந்த வசுவாகி
வாட்டு முக்கிரி மற்றுங் கராம்புடன்
கூட்டு வெந்தயங் கோலக் கறுவாவே. அஞ

இப்பொ ருட்க ளிரவியிற் காய்ந்தபின்
ஒப்பக் கூட்டி யுரலிட் டிடித்துமே
தப்பில் லாமற் றசவுடன் சுத்தித்து
வைப்புக் கற்கண்டில் வையும் வெருகடி. அசு

இச்செய்யுள் மற்றோர் பிரதியிற் பின்வருமாறு காணப்படுகின்றது.

செப்பு தாமரைத் தாதொடு கூவிளை
ஒப்பும் பூவு முரைக்கும் புனுகுமாம்
தப்பில் கஸ்தூரி யாவுஞ் சமனிடி
வைப்புக் கற்கண்டில் வையும் வெருகடி. அள

அமிர்த சஞ்ஜீவி யாகுமிச் சூரணம்
கிமிரும் வாதங்க ளாரக் கயங்கள்போம்
கிமிரும் பித்த நெடுத்த கணங்களும்
குமிறி யோடுங் குறியினுங் கூறுவோம். அஅ

மேக வெட்டை விறைப்புப் பிடிப்புடன்
ஆகந் தன்னி லடர்ந்த கரப்பனும்
போகப் புண்கள் புலம்பும் பயித்தியம்
வேக வாந்தி விளம்பு மதிசாரம். அசு

சடத்தில் வெப்புடன் முகங் கிரந்திநோய்
கடுப்பி ரத்தங்கா மாலை கிராணிபோம்
திடத்த வாயு சிதறும் பலசுரம்
அடுத்தி டாம லகலு மனேகநோய். கூ

கேர்ப்பசூடாமணிலேகியம்.

கறுவாக் கோட்டங் காம்பு வசுவாசி
மறுவில் சந்தன மாசியின் காய்மல்லி
விறல்சேர் வெந்தய மோமஞ் சிவதைசீவர்
இறிதாந் தீதக்குடன் சீரகஞ் செவ்வியம். கூக

தேவ தாரஞ் சிறந்திடு திப்பிலி
மேவு மாவரை யைந்து மிலவங்கம்
கோவின் போசனை குங்குமப் பூவுமாம்
தாவு மொவ்வொன் றிருகழஞ் சாகவே. கூஉ

மேவ வெல்லா மிடத்த தரித்தபின்
சோவின் பாலொரு நாழியிற் கூறிடும்
தாவு கற்கண்டு சாரப் பலமூன்று
தூவிக் காய்ச்சிச் சொலத்தகும் பாகினில். கூஈ

பற்பந் தன்னைப் பரப்பி மசித்திட்டுக்
கற்ரு நெய்யது காற்படி விட்டிடு
கொப்ப சூடாமணி கெட்டியாம் லேகியம்
பற்றுஞ் சுகதியிற் பாக்கள வுண்ணுமே. கூச

மங்கை கோப்ப மருவிடு ரோகம்போய்த்
தங்கி விதுவுஞ் சாருஞ் சிசுவுணடாம்
பொங்கும் வாதமும் போம்பித்த சேடமும்
பங்கஞ் செய்வட்டை பற்ரு திருமலே. கூடு

காய்ச்சல் குன்மங் கடுஞ்சூலை வாதமும்
மூச்சி லோப்பு மூடக்குங் கிரந்திபோம்
பாய்ச்சு வாந்தியுந் தாகமும் பற்றறும்
காய்ச்சு மேகமுந் தீர்ந்திடுங் காண்மினே. கூசு

சன்னித்தயிலம்.

சூதம் பொன்னரி தாரஞ் சுரைக்கெந்தி
ஓதும் வெண்பிசி னுசியின் காந்தங்கோய்
காது நல்லவின் காய முயிற்றண்டம்
மாது கேள்பொரி காரம் வகைசமன். கூஎ

கூட்டி யேரண்ட வெண்ணெயு நிம்பெண்ணெய்
ஆட்டு நல்லெண்ணெ யாமிவை தம்மிலே
போட்டுக் காய்ச்சிப் பொருத்த சரத்தினில்
வாட்டு சன்னி வகையெலாம் போகுமே. கூஅ

விநாயகன்மாத்திரை.

சூதங் கெந்தியுஞ் சொல்லு மரீசமும்
* நாதந் * தந்தியு நல்ல சடுக்காயும்
ஏதம் போக்கிய விஞ்சிநீர் விட்டரை
ஆதி யைங்கர னான வவுடதம். ௯௯

அருந்த வேண்டுதற் கான வனுபானம்
பொருந்து சீனி புளியெலு மிச்சையிற்
கிரந்தி குன்மங் கெடுஞ்சூலை யொன்பதும்
வருந்து காய்ச்சலும் வாய்வும் வலியும்போம். ௧௦௦

கூடும் வாதமுங் குற்றஞ்செய் விக்கலும்
சேடஞ் சன்னி திரிதோஷ மந்தமும்
நீடுஞ் சத்தி நெருங்குஞ் சறளிகள்
ஓடு மாமென் றுரைத்தார் மருத்துவர். ௧௦௧

சிவமாத்திரை.

சாதி லிங்கந் தகும்படி கட்டியே
ஓது திப்பிலி யொன்றுக் கிரண்டதாய்
மாது பால்விட் டரைத்து மறுபடி
சேத மின்றித் திரட்டிடு குன்றிபோல். ௧௦௨

சேருஞ் சுக்கினைச் சீவி யவித்திடும்
நீரி லுண்டிட நேர மிரண்டுண்டை
தீரும் வாதஞ் சிதறும் பலசுரம்
கோர சன்னியுங் குட்டங் கிரந்திபோம். ௧௦௩

மந்த மேப்ப மயக்கங் கபங்குன்மம்
தொந்த தோஷஞ் சுவாத மதிசாரம்
வந்த சூலை வருத்தும் பலநோய்கள்
சிந்த வெட்டுஞ் சிவத்தின் குளிகையே. ௧௦௪

---

* நாதம்—சாதிலிங்கம். * தந்தி—நேர்வாளம்.

தேவிமாத்திரை.

* சத்தி யிந்துப்புத் தாளகஞ் சவ்வீரம்
துத்தம் வெண்காரந் துரிசு மிளகுமாம்
வைத்த லிங்கம் வளருங் கடுக்காயும்
மெத்தி டாமன் மிகுமிஞ்சிச் சாற்றினால். கo௫

ஆட்டி * முர்க்கத் தளவு திரட்டியே
நாட்டுஞ் சுக்குநீர் நங்கை முலைப்பால்தேன்
வாட்டு முள்ளித் தயிலமும் வண்மையாய்க்
கூட்டி யுண்ணக் கொடுமைசெய் வாதங்கள். கo௬

ஆறு பத்துநா லாகுஞ் சுரங்களும்
சீறுந் தோஷங்கள் சேருந் தசவாயு
மாறுங் குட்ட மருவாது சூலைகள்
கூறுங் குன்மங் குறித்த கபங்கள்போம். கo௭

காச மந்தங் கரப்பன் பவுந்திரம்
வாசப் புண்கள் வருத்துங் கிரிச்சினம்
பேசும் பித்தமும் பேர்கல் லடைப்புடன்
வீசு மூச்சு வியர்வை விறைப்பும்போம். கo௮

மேவுஞ் சென்னி விழிநாச் செவிகண்டம்
தாவு நோய்கள் சடுதியிற் றீர்ந்திடும்
ஏவு சர்ப்பத்தி னேறும் விடங்களும்
தேவி மாத்திரை யுண்ணச் சிதறுமே. கo௯

வெற்றிவேலாயுதமாத்திரை.

இலிங்கம் பூர மெரிகெந்தி தாளகம்
துலங்கும் வீரமுந் துத்த மனோசிலை
நலங்கொள் வெள்ளி நருக்கு மரபொடி
குலஞ்சி றந்த பவளக் கொடியுமே. ககo

---

* சத்தி—கெந்தகம். * முர்க்கம்—பயறு.

கல்வி னருங் கனத்தநீ லாஞ்சனம்
வல்ல சாத்திர வேதி வகையுடன்
சொல்லுங் * தேசியிற் சுத்தித் தரைத்திட்டு
வெல்லும் மாத்திரை குன்றியின் னீதமாம். ககக

சாதி நாரத்தை தாதுவின் பன்னிரும்
மாது ளங்கனி மங்கையர் பாலுமாம்
தீத கற்றிய தேனிஞ்சி கற்கண்டு
சேத மின்றியே சேர்த்துக் கொடுக்கலாம். ககஉ

மேலிம் மாத்திரை வெற்றிவே லாயுதம்
கால னேயுங் கதறக் கடிந்திடும்
சூலை குன்மஞ் சுரஞ்சன்னி தோஷமும்
மூல வாயு முடக்கஞ் சறளியே ககஊ

இரத்த ரோக மெழுந்திடு சத்தியும்
உரத்த தாக முடம்பி னெரிவுகள்
சரத்தின் முட்டுடன் றக்கிப விக்கலும்
சிரத்தி னோய்களுஞ் சிக்கிடுந் தீருமே ககச

வாசஞ் செய்து வருத்திடும் வாதமும்
வீசுபித்தமும் வேகிக்குஞ் சேடமும்
காச மீளா கசத்தி லிருமலும்
நாச மாக நவின்ற மருந்திதே ககடு

கந்தன் கைவேல்

சுக்குடன் சாதிக் காயுந் துகளறு கஞ்சா விஞ்சி
மிக்குள வபினே மொன்று மிகாமலோர் கழஞ்சுகூட்டித்
தக்கவெந் நீர மைத்துத் தகுமுறை குளிகை யாக்கி
ஒக்கவெந் நீரிற் கொள்ள வோடிடும் வியாதி சொல்வாம்

---

* தேசி–எலுமிச்சம்புளி. சரக்குகளைச் சுத்திசெய்து எலுமிச்சம்புளியிலரைக்க என்பது கருத்து.

உண்டிடிற் சுரக்க ழிச்ச லுறுசன்னிக் கழிச்சல் வாயு
மிண்டிடுங் கிராணி யெல்லாம் விடுமிது கந்தன் கைவேல்
விண்டிடுங் குளிகை தன்னை விரும்பியே முத்தற் காசிற்
கொண்டசீ ரகத்தி லூட்டக் கூறிய கடுப்புப் போமே ககள

சுரவீரவாகுமாத்திரை

கார மொன்று கடும்பூ மிரண்டெடு
சேரும் லிங்கந் திரிபங்கு செப்பிடில்
வீர வாளத்தில் வித்தது நாலுமாம்
பாரிற் றேசியிற் பண்பா யரைத்திடே ககஅ

அரைத்த பின்ன ருழுந்தது போலவே
உரைத்த வண்ண முருட்டி நிழலில்வை
கரைத்து நல்கிட விஞ்சியின் சாற்றினில்
உரத்த சன்னி சுரங்களு மோடுமே ககசு

வாயு பத்துடன் வாதங்க ளெண்பதும்
தேயுங் குட்டங் திகைக்குங் கிரந்தி நோய்
மாயுந் தோஷ மருவாது சூலைகள்
சாயுங் குன்மஞ் சலத்தி லடைப்பும்போம் கஉ0

கல்ல டைப்புக் கனத்த மலச்சிக்கும்
அல்லல் செய்பு மனேக வியாதிபோம்
சொல்ல வேண்டிற் சுரவீர வாகுக்கு
வல்ல பாம்பின் வளர்விடந் தீருமே கஉக

சோதிசங்கரநாமக்குளிகை

கெல்லிக் கெந்தக நேர்வாளஞ் சவ்வீரம்
நல்ல தாளக நாட்டு மனோசிலை
வல்ல வெள்ளை வடிவாங் கெவுரியும்
அல்ல லின்றி யளவு கழஞ்சொன்றே கஉஉ

இலிங்க மிரட்டி யிடைகுறை யாமலே
பலங்கொ ளிஞ்சிநீர் படிவீசும் விட்டரை
பெலங்கொள் பாகம் பிரமாணங் சூன்றிபோல்
உலர்ந்த பின்ன ருரைக்கும் வகைகேளே கஉங

சோதி சங்கர நாமக் குளிகையை
ஆதிப் போதினு மந்திப் பொழுதினும்
கோதி லாச்சுக்கு நீரிற் கொடுத்திட
வாத பித்த வளர்சேட வன்சுரம் கஉச

சன்னி தோஷந் தசவாயு வுட்குத்தக்
குன்மஞ் சூலை கொடிய புறவீச்சுத்
தன்னும் வெப்பினிற் ரூன்றிய கட்டுநீர்
இன்னும் பல்பிணி யேகிடு மென்பரே கஉரு

சிவராசகுளிகை.

நாவி பொன்னரி தார மஞ்சிலை
காவி நிப்பிலி காந்த முரோகணி
தாவு சாத்திர வேதிநற் சந்தனம்
கோவின் ரோசனை குங்குமப் பூவுமாம் கஉசு

ஆகு மிந்துப்பு மக்கரு காரமும்
வாகு சேர்பொரி கார மதுரமும்
தாக மாற்றத் தகுந்தகஸ் தூரியும்
வேக மாரெலி மேவு குதிரையே கஉள

சேரு மஞ்சனஞ் சுக்குச் சிறுதேக்கு
நேருந் துத்தந் தூரிசிரு சீரகம்
தேருஞ் சாதியின் சேர்காய் வசுவாசி
நேரில் கோட்ட நிருவிடஞ் சாதிக்காய் கஉஅ

ஊற்ற வெள்ளைக் கெருட னெலிகொல்லி
மற்றி ரண்டு நிமிலை வெண்காரமும்
மூற்று முள்ளின் முருக்கினில் வித்துமே
சொற்ற வெல்லாங் தொகுகழஞ் சாகவே கஉசு

சாதி லிங்கந் தருந்தசெஞ் சந்தனம்
ஏத நீங்க வெடுமுக் கழஞ்சதாய்
மாதர் பாலின் மதித்தசை மூன்றுநாள்
ஓது கன்னலி னுற்றிடு சாற்றிலும் கஉஅ

சாதி நாரத்தை தங்கிய சாற்றிலும்
நீது நீரவொவ் வோர்தின மாட்டியே
ஓது மூர்க்கத் தளவு குளிகைசெய்
காது நோயனு பானங் கழறுவாம் கஉக

சேர்ந்த சுக்கினைச் சீவி யவித்திடில்
நேர்ந்து நின்ற பலசுர நீங்கிடும்
கூர்ந்த நீரொடு கொண்மது மங்கைபால்
நீர்ந்து வாய்வு சிதறிடுங் காண்மினே கஉஉ

தருப்பு தோடங் கனியிஞ்சி வெற்றிலை
முருங்கை யுற்றிடு பட்டை மூலிப்பால்தேன்
விரும்பி யூட்ட மிகுந்த சுவாதநோய்
பொருந்து காசம் புகைக்கு மிருமல்போம் கஉங

இருமல் தீர வினித்திடு குன்றியின்
மருவு சாறு மதுவுடன் கூட்டலரம்
பொருவு மிஞ்சி புகன்மது மங்கைபால்
விரைய வூட்ட விலகுமுத் தோஷமே கஉச

இஞ்சி நீரு மெலுமிச்சை யிற்புளி
விஞ்சு தேனும் விரவிப் பருகிட
மிஞ்சு தாகமு மேலிடு பித்தமும்
அஞ்சி யோடு மரோசிய மாதியே கஉ

நிம்பப் பட்டைக்கு நேர்ந்திடு சன்னிபோம்
துன்ப நீங்குந் துளசியு மாகுமால்
பின்பில் வீச்சொடு பேசிடு முட்குத்து
மன்பு ரத்து வருபக்க வாயுவும் கஉ

தீரக் காயமு முள்ளியுஞ் சேர்த்தவி
நீரிற் கொள்ளுக நெஞ்சடை வாய்வுக்குப்
பாரில் வெற்றிலை நீரிற் பருகிடக்
கூரு மண்டத்தின் வாயு குறையக்கேள் கஉ

வெள்ளை யுள்ளி வசம்பு நெருஞ்சிவேர்
கொள்ளு சுக்குக் குடிநீரிற் கொள்ளலாம்
அள்ளு மேரண்ட வெண்ணெய் முடிதும்பை
எள்ள லின்றி யிவையு மனுபானம் கஉ

மாத ருக்கு வருங்ககர்ப்ப வாயவினுக்
கோது முள்ளியுங் காயமு முற்றவி
சித மேவு வயிற்று வலியினைக்
காது கல்ல வசம்பு கருக்குநீர் கஉ

நீர டைப்புக்கு நேர்வெள் ளரிவிதை
மார்ப டைக்குஞ் சுறளிக்கு வாகிஞ்சி
பாரி டத்துப் படர்சிறு காஞ்சொறி
நீரு டைத்த சிறுகத் தரியுமே கசo

மேய தூதுளை *வாசை முயிற்றண்டம்
ஆய பூவுறு நாக மருஞ்†சனி
தோயும் புட்டவி நீரொடு திப்பிலி
தூய தூளொடு தோகை முலைப்பால்தேன் கசக

கூட்டி யுண்ணக் குலைந்திடுஞ் சேடமும்
நாட்டு மூச்சு நலியு மிருமலும்
மூடடு சன்னி மொழிக்திடு தோஷமும்
ஈட்டு நோய்க ளினும்பல தீருமே கசஉ

தீரு நோய்களுக் கேற்ற வனுபானம்
பாரின் மெத்தவு முண்டு மருத்துவர்
தேரு மாறு தெரிந்திட நன்றதாம்
சேரு மாத்திரை யுஞ்சிவ ராசனே கசஙூ

இராமபாணக்குளிகை

தித்தம் வாளந் துடிக்குக் கெவுரியும்
ஒத்த வண்ண மொருகழஞ் சொவ்வொன்று
சுத்தி யாக்கிப்பின் ரூற்று மவுரியும்
மத்தஞ் சாறு மளவாக விட்டரை கசச

அரைத்த பின்னே யளவு பயறுபோல்
உரைக்கு மாத்திரை யுள்ளிதே னிஞ்சியில்
கரைத்து நல்லக் கபமீளை வாயுவும்
உரத்த சேடமு முட்குத்து வீச்சும்போம் கசஞ

தினச்சு ரத்துடன் நீர்க்கு முறைச்சுரம்
கனத்த தோஷங் கடுஞ்சன்னி ஷிக்கல்போம்
இனதிற் குன்ம மெழுஞ்சூ லையொன்பதும்
அனர்த்தங் தீர்க்கு மதுராம பாணமே கசகூ

†சனி = கண்டங்கத்தரி. *வாசை–ஆடாதோடை

கோரோசனைக்குளிகை.

கோட்ட மக்கருக் கோரோசனை கர்ப்பூரம்
கூட்டு மேலமுங் குங்குமப் பூவுமாம்
காட்டு சாதியின் காய்தீ முறுகலும்
நாட்டு மொன்று நயந்து கழஞ்செடே — கசள்

இலிங்கங் நாலு மிதமாகச் சுத்தித்துத்
துலங்கு சந்தனஞ் சொற்ற காரம்புடன்
உலர்ந்த செண்பகப் பூவு மூசைத்திடிற்
பலங்கா னாகப் பருக்க விடித்துமே — கசஅ

நிரை விட்டு நெருப்பினி னுலொன்றும்
நேரக் காய்ச்சி யிறுத்திடு நீரினல்
சேர வாட்டித் தெரிந்த பதத்தினில்
கூரு மாத்திரை குன்றியின் வீதமே — கசக

அந்தி சந்தி யனுபானத் தோடுணை
வந்த பித்தம் வருத்து மிருமல்போம்
மந்த தோஷ மருவாது சனனிகள்
தொந்தக் காய்ச்சல் தொடராது சூலையே — கருட

அண்ட வாத மலீலக்கு மதிசாரம்
தொண்டைச் சேடந் தொடுத்த சுவாதநோய்
கொண்ட வீபு குழந்தை வியாதிகள்
விண்டு நீங்கும் விதமிஞ்ங் கூறுவோம் — கருக

பாரக் குன்மம் படர்ந்திடு புண்குட்டம்
நீரிற் சோர்வையு நீண்ட கழிச்சலும்
ஊருஞ் சில்லிட மோடும் வலியபேர்
கோரோச னுதியென் றேமுறை கூறினர் — கருஉ

பஞ்சபூதமாத்திரை

தாரம் வீரமுந் தக்க கெவுரியும்
கோர வெள்ளை குணமுள லிங்கமும்
நேரும் வாள நிறுத்தபின் றேகிநீர்
சேர விட்டுத் திடமா யரைத்திடே கடுஉ

பின்னு மிஞ்சியின் பேசிய சாற்றினுல்
மன்ன வாட்டி வகுத்த பயறுபோல்
தன்னு மாத்திரை சூழ வுருட்டியே
வன்ன மெண்முலை வந்திடு பாலொடே கடுச

கரும்பு தேனிஞ்சி காட்டி னெருக்கலை
முருங்கை வேர்ப்பட்டை மூட்டு மிளகுநீர்
விரும்பு சாரணை வெள்ளுள்ளி சேர்த்திடின்
அருந்து தற்கனு பானம தாகுமே கடுடி

சொல்லுபானந் தொகுமுறை கூட்டினும்
அல்ல தொன்றி லடித்துக் கொடுக்கினும்
வல்ல நோயின் வகையை விளங்கியே
நல்ல வாகடர் நாட்டுவர் கூட்டுவர் கடுசு

பஞ்ச பூதிய மாத்திரை பாருளோர்
மிஞ்சு சன்னியு மெய்யிற் சுரங்களும்
அஞ்சு குன்ம மடித்திடு சூலையும
விஞ்சு தோஷமும் வெய்ய வலிகளும் கடுள

குட்ட மந்தங் குறிததிடு மீளையும்
விட்டு நீங்கும் விலகிடுஞ் சேடமும்
பட்ட தேமல் படர்ந்த கிரந்திநோய்
கெட்ட புண்கள் கெடும்பல நோய்களே கடுஅ

நோய்செய் வாத துவலரு மீளும்
பாயும் பாம்பிற் பலவிட மானவும்
தோயுஞ் சில்விடஞ் சூழ மெலிவிடம்
மாயு மென்று வகுத்தனர் வாகடர் கருஉ

மிருத்தியாதிமாத்திரை

முத்த மிச்சு முதிர்ந்திடு நெல்லிக்காய்
கொத்த மல்லிபுங் கோட்ட மிலவங்கம்
வைத்த வெட்டி வசுவாசி தற்கோலம்
சத்து மாசிக்காய் தான்றி கல்காருமே கஉ0

ஏலம் பூர மிடுதேவ தாரமும்
கோலச் செண்பகப் பூவுங்கோ ரோசனை
நீல வஞ்சன நேரு மகிலுமாம்
மேலிக் கற்க மிகாமற் சமன்கொளே கஉக

தென்னம் பிஞ்சிற் சிறந்திடு நீரினுல்
உன்னி யாட்டி யுருட்டி மிளகுபோல்
வன்னி தன்னில் வறுத்தவி யோமநீர்
பின்னுஞ் சீரகம் பேசுங் கஷாயமே கஉஉ

சந்தி காலத்திற் சாப்பிட வீருண்டை
வந்த தாகம் வளர்பித்தஞ் சேடம்போம்
முந்து தோஷ முறிபுஞ் சுரம்வாந்தி
சிந்துஞ் சன்னியுஞ் சீதக் கழிச்சல்போம் கஉஊ

விக்கல் சந்தி வெதும்பிடு வாயுவும்
கக்கல் பினிசங் காணு மயக்கமும்
மிக்க மங்கையர் மேவு சுவாதமும்
அக்கி மேவு மதிக விருமலும் கஉஎ

பெருத்த காசமும் பிள்ளைக் கணங்களும்
வருத்துங் கண்ணோய் வரட்சிபு மாறிடும்
திருத்த மாகவே தேகங் குளிர்ந்திடும்
மிருத்தி யாதிக்கு மெய்யி லழகுண்டாம் ககூடு

சந்தனாதிக்குளிகை

சந்தனங் கோட்டத் தக்கவி லாமிச்சு
முந்தி ரிக்கனி முத்த மிருவேலி
அந்த வெட்டிவே ராவின்கோ ரோசனை
முந்து பேரீஞ்சின் முற்றும் பழமெடே ககூக

கருட பச்சை கறைக்கண்டன் பூரமும்
மருவு தான்றிக்காய் மாசிக்காய் கெல்லிக்காய்
சரிய தாகச் சரக்கை நிறுத்துமே
அரிய செவ்வி ளீரா லரைத்திடாய் ககூஎ

உண்டை குன்றி மணிபோ லுருட்டியே
கொண்ட சீரகங் கூறுங் குடிநீரில்
விண்ட மாத்திரை யிட்டுக் குடித்திடப்
பண்டை வெக்கை பறக்கு மிருமலே ககூஅ

பித்த சேடம் பெருத்த சுரங்களும்
சத்தி மூர்ச்சையுஞ் சார்த்திடி விக்கலும்
தத்துங் காசங் கணைகரு மக்கரம்
முற்றுங் காந்தி மொழிந்த வரட்சிபோம் ககூகூ

சிந்துந் தேமலுஞ் சோரா தசோகியம்
வந்து லாவி வருத்துஞ் சுவாதம்போம்
தொந்த ரோக டொலைபு மிதன்பெயர்
சந்த னாதி குகுந்த குளிகையே ஙஎ0

புனுதேலாதிக்குளிகை

நாவிச் சட்டமு நல்ல புனுகுமாம்
தேவ தாரஞ் சிலாசத்துச் சீரகம்
தாவு வெட்டிவேர் சந்தனம் பேரீஞ்சு
மேவு நற்பழ மேன்மையாய்க் கூட்டுமே — களக

கோட்டங்கோ ரோசனை கூறு மிலவங்கம்
நாட்டு முத்த நலுக்கரு மூந்திரி
வாட்டும் வற்றல் வளர்கொத்த மல்லியும்
ஈட்டுஞ் செண்பகப் பூவுட னேலுமே — களஉ

சாதிப் பூவுஞ் சரக்குக் கழஞ்சொன்று
தீதி லாப்பன்னீர் சேர்த்தே யரைத்திடு
ஓத பாக முருட்டு மிளகுபோல்
நீதி யாக நிகழ்த்து முனுபானம் — களஙு

கரும்பின் சாறுடன் காரிகை பாலுமாம்
ஊரஞ்செய் மாத்திரை யுண்ணி லிரண்டெடு
விரும்பிச் சாப்பிட விட்டோடு நோயின்பேர்
பரம்பும் வாதம் பகர்பித்தஞ் சேடமும் — களச

தாகம் வீக்கமுஞ் சாராது சன்னிகள்
வேகக் காய்ச்சல் விலகுஞ் சலபேதி
மேக வாயுவும் வெட்டை கடுப்புடன்
தேக வெப்பமுஞ் சேராது வாந்தியே — களஞ

மூர்ச்சை பையு மூடக்கு மிருமல்போம்
தீர்க்கும் பேதி சிதறுங் கசரோகம்
வேர்க்கு நோய்கள் விரைவில் விலகிடும்
பூர்க்கு ளோருக்குப் பற்று தரோசியம் — களஞ

சுரளி நீங்கிநற் தாது வளர்ந்திடும்
அரிப வல்லிட மாற்றுஞ் சடுதியில்
நரர்கள் யாவரு நன்றுய் வளர்ந்திடத்
திருவும் வாசமாய்ச் சேர்க்குமே லாதியே களள

வீரக்கலிங்கம்.

தூரிசு திப்பிலி சுக்குநேர் வாளமாம்
மிரியல் கோட்டமூ மிக்க பெருங்காயம்
எரியுங் கெந்தி யெடுசம ஞகவே
அரிய விஞ்சி யரைக்க வரிமையே களஅ

கொடியின் வெற்றிலைச் சாற்றிற் குழைத்துப்பின்
வடிவக் கண்களில் வண்மையாய்ப் பூசிடக்
கொடிய சத்தியுங் குத்து வகைகளும்
படியுந் தோஷம் பறக்குஞ் சுரங்களே களசு

ஐபம் வாத மகலும் விழிநோய்கள்
வெய்ய சூலை விலகும் விஷங்களும்
செய்ய வீரஞ் சிறந்த கலிங்கத்தால்
வையத் தோருக்கு வாராது நோயொன்றும் கஅo

சாதிலிங்கக்கட்டு.

சுத்த போசனத் தோகையர் பாலிலும்
வைத்த சம்பிர வன்புளி தன்னிலும்
சுத்தி லிங்களுஞ் சுருக்கிடக் கட்டிடும்
வித்து நெல்லிடை வெந்தய நீரிலே கஅக

பேதி சத்தி பெருத்த சுரங்களும்
வாதம் வாயு வளர்குட்டஞ் சூலையும்
ஓதுங் காச முரத்த கரப்பனும்
தீது சேர்சன்னி யாவையுந் தீருமே கஅஉ

இரசகர்ப்பூரக்கட்டு.

இரச கர்ப்பூர மெடுகட்டி யோர்பலம்
நிசமா மிஞ்சியி னீரிற் சுருக்கிடு
வசமா மணக்கின் வடியெண்ணெய் சீனியும்
இசைவாய்ச் சீர மெரித்தாறு நீரிலே கஅஉ

உதய காலத்தி லுண்டிட நெல்லிடை
சிதறும் வாதமுஞ் சோராது சூலைகள்
பதறுங் குன்மம் பழமல நீங்கிடும்
விதனஞ் செய்யும் விஷசுரம் வாயு போம் கஅச

அரிதாரக்கட்டு.

பொன்னரி தாரம் பொருந்தப் பலமொன்று
வன்னத் தேசியில் வாகாய்ச் சுருக்கிட்டுத்
தன்னி யப்பாலிற் றுக்கிடு நெல்லிடை
வின்ன சேடம் விலகும் விசைவிலே கஎ டு

காச மீளை கரப்பன் கபங்கள்போம்
மோசஞ் செய்யுங் கசம்முறிந் தோடிடும்
வாசப் புண்கள் வளர்ந்த விருமலும்
கூசி யோடுங் குணமுள கட்டுக்கே கஅசு

தாளகக்கட்டு.

வண்ணத் தாளகம் வாகாய்ப் பலமொன்று
சுண்ணந் தன்னிற் சுகமுறச் சுத்திசெய்
மண்ணி னன்றாய் வளர்ந்த குருக்கத்தி
எண்ணும் பாலி லிசைய வினைத்திடே கஅள

அங்கு பின்ன ரடர்ந்தவப் பூவிதழ்
தங்க வொட்டிடு சாற்றிய வவ்வில்
பொங்க வாட்டிப் பொதிந்து கவசமாய்க்
கங்கு றன்னிற் புடமிடக் கட்டிடும் கஅஅ

கட்டுந் தாளகங் காசங் கபமீழை
துட்ட மார்பருத் தோஷஞ் சுரஞ்சன்னி
எட்டு மைந்தும் விலகிடு மிஞ்சியின்
சொட்டு நீர்மற்றுஞ் சூழு மனுபானம் கஅகூ

வீரக் கட்டு.

வீர மோர்பலம் வில்வப் பழச்சதை
சேர நன்றாய்க் கவசித்துச் சீலைமண்
கூரச் செய்து குழிமண் மறைவிலே
தேரு மீரெருச் சேர்த்துப் புடமிடு ககூ0

சொன்ன வாறு புடந்தொறு மோரெரு
மன்ன வேற்றி வகுத்த தசபுடம்
பின்ன மொன்றும் விரவாது பேணியே
துன்ன விட்டு முடிந்தபின் சொல்லுகேன் ககூக

சுத்தி செய்த கருவங்க மோர்பலம்
அத்தை யோட்டி லுருக்கி யதனிறை
சொற்ற தாளகந் தூவி வறுககவே
மற்று வங்கம் பொடிபடு மாண்புகேள் ககூஉ

கேளு மப்பொடி தன்னிறை தாளகம்
நீளக் கூட்டி நிலைபெறு கல்வத்தில்
தூள தாய்வரு தோகையர் பாலினால்
மாள வாட்டி வகுத்திடு வீரத்தை ககூ௩

கவசஞ் செய்து கருதிடு சீலைமண்
தவறு றாவணஞ் செய்து தசபுடம்
அவியு நற்புட மாயிட வீரமும்
கவரு றாவணங் கட்டிடு மென்பரே ககூச

வாத மையம் வகுத்த சுரஞ்சன்னி
சீதம் வல்விடஞ் சேர்ந்திடு சூலைகள்

மோதி நின்று முருக்குங் கிரந்தியும்
ஆதி நோய்க ளகலுமென் றோதினர் ககூடு

சாதிலிங்க உருக்குக்கட்டு.

*ஓதும் வங்கத்தி னுற்ற கவசத்தால்
சாதி லிங்கங் குழிமண் மறைவீலே
ஓதும் வண்ண முமிப்புட மிட்டிடப்
பேத நீங்கிடக் கட்டுமுருகியே ககூசு

சாதிலிங்க சிந்தூரம்.

இலிங்கக் கட்டி லிசையும் பழச்சாறு
தலங்கக் கூட்டி யரைத்துச் சுகமுறப்
பெலங்கொள் வெய்யிலிற் பேணிலை வில்லையை
சலந்த விர்த்தபின் றக்கசிந் தூரமே ககூள

இம்ம ருந்தை யெடுத்துப் பணவிடை
அம்மை பாலு மடுத்திடு தேனுள்ளி
சும்மை யைந்தையுங் தூளாக்கிச் சேர்த்திடச்
செம்மை யாகவே தீரும்வியாதிகேள் ககூஅ

வாத மெண்பதும் வந்த சுரங்கள்போம்
பேதி சன்னி பெருத்த விரணநோய்
தீத சுரசூ செறிந்த கரப்பன்கள்
சீத மந்தமுந் தீருங் கிராணிபோம் ககூக

குட்டஞ் சூலை கொடிய கிரந்திகள்
வெட்டை மேகம் விலகுஞ் சலதோகம்
தொட்ட தோஷந் தொடராது வாய்வுகள்
சுட்டி டாதுமேற் றுன்பங்க டீருமே உ00

---

*ஓதும்வங்கம் என்றது மேற்கூறிய வங்கப்பொடியை. இது ஒருபலம் மூலிப்பாலாலரைத்தஒருபலம் சுத்திசெய்த இலிங்கக்கட்டிக்குக்கவசித்து நீலமண் எழுசெய்து உமிமறைவிற்புடமிட உருகிக்கட்டும்.

இரசகர்ப்பூரபற்பம்.

பூரக் கட்டிநீப் பூவையர் பாலினுற்
சேர விட்டுத் திறமா யரைத்திடு
பாரில் வில்லை பகலவன் பார்த்திட
நீர்வ டியுங்கி சமூன்று காளிலை உஅக

பற்பக் கெல்லிடை வெல்லம் வெருகடி
உற்ற மாந்தர்க ளுண்டிடத் தீருகாய்
குற்ற வாதங் கொடுஞ்சூலை யொன்பதும்
தொற்றுங் குன்மந் தொடைவாழை யாதியே உஅஉ

வைத்தியத்தெளிவு—அனுபந்தம்.

புறங்கிக்கிழங்குச் சூரணம்.

பாரார் பறங்கிக் கிழங்காறு பலமிளகு
பரவுசுக் கிவைவகைக்குப்
பலமொன்று சீரகந் திப்பிலி வகைக்கரைப்
பலமுலவு கெந்திசூதம்
ஏரார் கழஞ்சுரான் கிவைவகைக் கதிமதுர
மேலமதி விடயமுலுவா
விலவங்கம் வசுவாசி பொன்னிமிளை வெண்ணிமிளை
பிலிங்கமொடு சித்திரத்தை
போ ரத்னதிப் பிலிமூல மோமம்
பெருங்காய முள்ளிகோட்டம்
பேசுகர்ப் பூரநா கம்பூ வெளுத்தற்
பிசின்மல்லி குங்குமப்பூக்
காரா ரபின்கடுகு வாய்விளங் கந்துரிசு
காந்தமில வங்கபத்ரி
கடுகுரோ சனிகுரு சாலிசிறு மூலமுங்
காரம்புசா திக்காயுமே கூ

சாதிபத் திரிகருஞ் சீரகஞ் சிறுதேக்குச்
சதகுப்பை கோரோசனை
தக்கசாத் திரபேதி பொரிகாரம் வான்மிளகு
சாரமிகு நறியகறுவாத்
தீதில்சீ னக்கார மரிதார முயர்மனோ
சிலைதுத்த முலவுவாசச்
செண்பகப் பூவிவை வகைக்குக் கழஞ்சொன்று
சீந்திலரை பொடியியங்கும்
ஓதுநத் தைச்சூரி கொடுவேலி கிட்டமோ
ரொன்றுநாற் கழஞ்சாகவே
யொப்புறு மமுக்கிரா யிருகழஞ் சிவையெலா
முரலில்வே றாயிடித்துக்
காதலொடு நன்றாய்க் கலந்துபி னரைக்கக்
கறுத்தநற் பற்பமாகுங்
கருதியிதை யுண்ணவனு பானமொடு பத்தியங்
கழறுவன் கேளுமயிலே உ

அறியுமிப் பற்பத்தை வெந்நீரில் வெருகடி
யருந்தவரை மண்டலந்தா
னாறாத வெட்டை பிரமிய நோய்க ளாதியன
வரையாப்பு வாதமெல்லாம்
முறிகிரந் திப்புண்கள் புற்றுக்கண் மூலங்கண்
முதலாய நோய்கடீரு
முருகுகமழ் தேனிலுட் கொள்ளவே யிருமல்வகை
முற்றுமற் றொழியுமின்னம்
நறுநெய் யினிற்கொள்ள மந்தார காசங்க
னவிலீழை யிருமல்போகு [யாய்
நரைதிரைகண் மாற்றியுட லுயிர்கொள்ளு முண்மை
நயனங்கள் பிரபைகாணும்

கறியுப்பை நன்றுப் வறுத்துபின் கூட்டலாங்
கத்தரி யொடுமுருங்கைக் [தேங்
காய்வகைக ளுண்ணலாஞ் சொற்பமாய்ச் சுட்ட
காயையுஞ் சேர்க்கலாமே

சிவகரத்தைச் சூரணம்.

அதிவிடயங் கஸ்தூரி மஞ்சள் கோட்ட
மாவரையி லஞ்சுவகை யவின்கர்ப் பூரம்
இதமுறுகோ ரோசனைகன் ஞரி முத்த
மிலவங்க மிருதகுரு சாணி சீரம்
சதுர்மறையோ ருகந்தசந்தந் தாம ரைப்பூச்
சாதிக்காய் வசுவாசி கராம்பு கெல்லி
மதுகப்பூ வோமநிறை சமன தாக
வளம்பெறவே யிடித்துநன்றுப் வடிகொள்வாயே

வடிகொண்ட பொடியினிடை சிவக ரந்தை
வளம்பெறுசர்க் கரையிரண்டு பலமுங் கூட்டித்
திடமுடனே யரைத்துநன்று பெடுத்துக் கொண்டு
தினமிரண்டு வேளையொவ்வோர் கழஞ்சு கொள்ளக்
கொடியபடர் தாமரையு மேக மெல்லாங்
கூறுகின்ற நீர்க்கடுப்புக் கிராணி யோடே
அடைபடருஞ் சலக்கழிச்சன் மூல ரோக
மக்கினிமந் தம்பொரும லகலுந் தானே

மேகசஞ்சீவிச் சூரணம்.

மதுரசற் கராம்பு திப்பிலி யுள்ளி
வருமிரு சீரகங் காயம்
விதையுறு குலக்கா யொடுவசு வாசி
விளம்பிய வவின்பெருங் காயம்
மதியுட னொன்று நாற்கழஞ் சாக
வருத்திடு பறங்கியின் பட்டை

அதுவுமெண் பலமாய் நிறுத்திவை யெல்லா
மரியகூஸ் மாண்டத்தின் வயிற்றில்
குடலுடன் விதையு நீக்கியங் கிட்டுக்
கூறுநற் புகைகின்பால் படியும்
கடிபெறு கருப்பின் சாரெருரு படியுங்
கட்டியாண் பணியின தாக
உடனதிற் கரைத்துக் கூடவே யிட்டு
மொருபங்கு முன்மருந் ததனைத்
திடமுடன் மேலு மிட்டதை மூடிச்
செவ்வையாய்க் கட்டிதெல் லதனுள்

வைத்துகா ளேமு சென்றபி னெடுத்து
வருபுறக் கீதாலினை யகற்றி
உற்றதோர் பழமு மருந்துவெவ் வேரு
யுலர்த்தியே சூரணஞ் செய்து
நித்திய மருந்து வெருகடி தின்று
நினைவுட னைந்துகாட் பின்னர்
சுத்தநீர் தேரய வுட்டனை வாதந்
தொலையுமேற் கால்கையிற் பிடிப்பும்
உளைவுடன் பிடிப்புந் தீர்ந்திடத் தேங்கா
யுற்றபூ வறுத்ததிற் பணியின்
வினைவுறு கட்டி யுடனிடித் தினிக்கும்
வெறிதரு தேன்கலந் ததிலே
வளமுறு மருந்து கொள்ளுக மூலம்
வலிதரு கோர்ப்பத்தில் வாயு
குளிருறு வெப்புப் பாவைதீர்ந் திடத்தீதன்
கூறுகா ரெள்ளிலெண் ணெயுமாம்
ஆமினுங் கொடிய சிப்பிர மியத்துக்
காவுறு தயிரினிற் கொள்ளப்

பேரமது பலவாம் பிமமியங் களுக்கும்
பொற்புறு மஞ்சணீர் கன்மும்
காமுறு பசுநெய் தேனுடன் சேனி
கலந்துசீ னட்டிகெல் லரிசி
ஆமதின் மாவு மருந்ததங் கூட்டி
யதிரசஞ் சுட்டுணச் சிலகாள் சுo

பின்பணி வெல்லக் தன்னிலுஞ் சாம்பல்
பேசிய வாலழியின் பழத்தில்
முன்புறு மினீர் சர்க்கரை யிவற்றின்
முறைப்படி பத்துகா ளாக
அன்புடன் கொள்ள நன்றதாம் புளியை
யகற்றியே யுப்பிணை வறுக்கப்
பொன்பெறு காணி யுடனறைக் கீரை
புகலாது மிவைகள் பத்தியமே சுக

சாதிக்காய்ச் சூரணம்.

முருங்கைப்பிசின், விளாம்பிசின், ஓதியம்பிசின், அத்திப்பிசின், இலவம்பிசின், இலந்தைத்தம்பலம், தேற்றுவிதை, ஆவரம்பட்டை, ஆவரையரிசி, காயுருவியரிசி, புல்லாந்திப்பட்டை, ஆலம்விழுது,-முகை-வித்து, அரசம்வித்து, கஞ்சாவித்து-இலை, மல்லிதாங்கிவேர்-இலை, கன்னரிவேர், கோரைக்கிழங்கு-வகைபிடிக-சாதிக்காய்-கழஞ்சு-உ. ஏலம் இலவங்கம், சாதிபத்திரி, இலவங்கபத்திரி, கராம்பு, ஓமம், உலுவா, மாயாக்காய், ஆதியதிவிடயம், கைப்பு, களிப்பாக்கு, வசுவாசி, அதிவிடயம், அவின், நற்சீரகம், சுக்கு, வசம்பு, கோட்டம், உள்ளி, பெருங்காயம், கர்ப்பூரபத்திரி, தாளிசபத்திரிவகை கழஞ்சு-க. இடித்துச் சூரணம்பண்ணவும். வெருகடிதேன், நெய், பால், மாதளம்பழச்சாறு, கற்

கண்டு முதலியவற்றில்கூட்டி உண்ண பிரமியம், மதுமேகம், தந்திமேகம், இந்திரியஒழுக்கு, வெள்ளை, வெட்டை, பிரமேகம் முதலியனதீரும் இந்திரியபுஷ்டி யுண்டாகும்.

வெள்ளறுகுச் சூரணம்.

வெள்ளறுகுவேர்-இலை, கொடுவேலிவேர், சிவனார் வேம்புவேர், எருக்கலைவேர், உவாய்வேர், இயங்கம்வேர், பறங்கிக்கிழங்கு-வகை-பலம்-க. காரம்பு, வசுவாசி, சாதிக்காய், திப்பிலி, திப்பிலிமூலம், இருசீரகம், நெல்லிக்காய்க்கெந்தகம், மனோசிலை, பொன்னரிதாரம், ஆதியதிவிடயம், அயின், சாதிலிங்கம், இரசம், குங்குமப்பூ, கோரோசனை-வகை-கழஞ்சு-க.

வேர்வகை, இலை, பறங்கிக்கிழங்கு, சரக்குகள் இவற்றைவெவ்வேறுயிடித்துக்கலந்து, கெந்தகம் முதலியவற்றையும் சுத்திசெய்து வேறுகபொடிபண்ணிக் கலந்துபின் குங்குமப்பூ கோரோசனை சேர்த்துக்கடையியில் இரசம்சேர்த்துஇடித்து வேட்டில் அயித்துலர்த்தி அரைத்தெடுக்கவும். வேருகடி தேனின்றின்று வெந்நீர்குடிக்கவும். பத்தியம் பாலும்சோறும். மற்றொன்றுமாகாது. கைகால்குத்துளைவு, முடக்கம், சூலை, கிரந்திவாதசூலை, பிரமியவாதசூலை, பறங்கிவாதசூலை, முறிகிரந்தி, சந்துவாதம், கொருக்குப்புண், வாதங்கள் பலவுந்தீரும்.

சீரகலேகியம்.

ஆவரைவேர்ப்பட்டை-இலை-காய்-பூ-விதை, கடலிருஞ்சிப்பட்டை, அரசம்வேர், அத்திப்பட்டை, மாம்பட்டை, ஆண்பனைவேரில்முகை, வல்லாரைசமூலம், சிறுகாஞ்சோன்றிவேர், தூதுவளைவேர், நன்னாரிவேர், காட்டுமுல்லைவேர், பற்படாகம், படுக்கைவிளாத்திவேர், இலாமிச்சம்வேர், வெட்டிவேர், வில்வம்வேர், முசுமுசுக்கைவேர், தேற்றுவேர்,

சிற்றாமுட்டிவேர், கண்டங்கத்தரிவேர், கருவாழைக்கிழங்கு,-வகைக்குபலம்கால், இடித்து தூள்செய்து தூணிநீர் எட்டொன்றாக வற்றவைத்துப்பிழிந்து அத்துடன் தென்னம்பாளைச்சாறு படிக. கலந்து, காரம்பு, சாதிக்காய், வசுவாசி, சுக்கு, வகைக்கு விராகனிடை ச, இந்துப்பு விராகனிடை கூ திப்பிலி, கோரோசனைவகைக்கு விராகனிடை க, காட்டுச்சீரகம் விராகனிடை-கூ, இவற்றுள் சாதிக்காய், வசுவாசி, கோரோசனை என்னும் மூன்றையும் வெய்யிலில் உலர்த்திப் பொடிபண்ணவும், மீனையவற்றை இளவறுப்பாய்வறுத்துப் பொடிபண்ணவும். சுற்சீரகம் விராகனிடை-கசுo பொறுக்கி எடுத்து எலுமிச்சம்புளியில் முப்பது நாழிகை ஊறவைத்து நிழலிலுலர்த்திப் பொடிபண்ணவும். சுற்சுண்டுறாறு விராகனிடை காயவைத்து மாவாகஎடுக்கவும் பால் நாலுபடியில் உள்ளி பத்துவிராகனிடை சேர்த்து பாகுகாய்ச்சிக்கொள்ளவும். முந்தியகஷாயத்தைப் பாகுபருவத்தில் காய்ச்சி ஆறிபமறுபடி அடுப்பில்வைத்து பால்சேர்ந்த குழம்பும் நெய் அரைப்படியும் விட்டுக்காய்ச்சி எல்லாம்சேர்ந்து பொன்விறமாக வரும்பொழுது சாகக்குத் தூளும், சீரகத் தூளும் கலந்து சிறுகச்சிறுகத்தூவிக்கைவிடாமல் துளாவிக்காய்ச்சவும், சுற்சுண்டித் தூளும் அப்படியே தூவிக்கிண்டி லேகியபதம்வரும் நேரம் இறக்கி வைத்துக்கொண்டு, தேன்-படியரை சற்றே கூடவைத்து லேகியத்தில் வார்த்துக் கிளறிக்கொள்ளவும். மூன்றுநாள் தாணியபுடம் வைத்து எடுத்துக் கொட்டைப்பாக்கவவு தின்னவும்; மூன்றுநாளைக்கு புளி ஆகாது. இந்த மூன்றுநாளும் காலையில்மட்டும் மருந்து உண்ண அதன்பின் இருவேளையும் உண்ணலாம்.

மாங்காய், பாகற்காய், பூசணிக்காய், சுத்தரிக்காயிவை தவிர மற்றெல்லாமாகும், குவிர்த்தநீரில் குளிக்கலாம்.

பழஞ்சோறு பிழிந்து புதுத்தண்ணீர் கூட்டி ஊறுகாய் சேர்த்து உண்ணலாம்.

மேகவகை, நீரழிவுவகை, சரீரத்தளர்ச்சி, வாதபித்த சிலேற்பனங்கள் பிரிந்து சிதறிநிற்பது, உஷ்ணரோகம் முதலிய பலநோய்கள் தீரும்.

தயிர்க்குழம்பு.

இஞ்சி கரும்பு தேசிப்புளி ஈருள்ளி நீர்முள்ளியிலை மாதளம்பழம் தோடம்பழம் இவை சாறுவகை படி கால். பசுத்தயிர் படி ௩ தேன் படி கால். கற்றாழைவேர் சாரணை வேர் வகை பலம் கால். நாலொன்றாயவித்து இறக்க. ஆண்பனைப் பனங்கட்டி.பல. இ. கீச்சுக்கிட்டம் கோசலத்திற் சுத்தி செய்து—பலம். இ. காந்தம். பலம். இ. திறிகடுகு ஓமம் கடுகு ரோகணி வசம்பு மல்லி உள்ளி கோட்டம் மதுரம் கராம்பு வசுவாசி சாதிக்காய் கிருமிசத்துரு இந்துப்பு வகை-கழ. க. வேரவித்த நீரிலரைத்துக் கூட்டி குழம்பாகக் காய்ச்சிப் புதுப்பாண்டத்தில் வைத்து அந்தி சந்தி பாக்களவு மண்டலம் கொள்ள சோகை வீக்கம் முட்டு இருமல் தீரும்.

இந்திர ஏலாதிக்கடுகம்.

மாலயன் றேடிக் காணா மான்மியன் மார்க்கண் டற்காய்க்
காலனை யுதைத்த மூர்த்தி கருணைகூர்ந் தெடுத்துக் கூறச்
சேல்விழி மகிழு மிந்த்ர வேலாதிக் கடுகந் தானே
பாலர்கள் விருத்த ரெல்லாம் பருகிட வினிய தாமே க
ஆமிது மயூர மானு மாவின்ரோ சனையி னோடே
ஏமபா ரிரலை மேதி யேனங்காண் டாவின் கொம்பு
தோமிலா விரச தார சிந்தூரம் வீரச் சுண்ணம்
பூமிலி பூரச் சுண்ணம் புனுகொடு தேவ தாரே உ
தார்செறி நாவி வாசி சாதிக்காய் கராம்பு திப்பில்
பார்செறி சந்தஞ் சுக்குப் பவளஞ்சாம் பிராணி பச்சை

கார்செறி கெருட பர்சை கற்பாசி குங்கு மப்பூப்
பேர்சிறு நாகங் கோட்டம் பெருநாக மலருஞ் சேரே கூ
சேர்ப்பாய் நல்ல பிசினிஞ்சு திகழு மதுபம் வான்மிளகு
ஆர்க்கு மாத்தி காஞ்சூரை யலரு மிருப்பை மாவிலங்கை
வேர்க்கொள் வில்வ முல்லிகளின் விரும்பு மலரு முக்திரிகை
தீர்க்கும் பிஞ்சுஞ் செங்கழுநீர் தேரு மரத்தை கோரையுமே ச
மேவு மாஞ்சின் மோதகமும் விரும்புங் கறுவாப் பத்திரியும்
தாவும் வகைக்குக் கழஞ்சொன்றுந்தங்கத் தானுமெண்கழஞ்சு
பூவி லாறு மாணிக்கம் புகலும் வெள்ளி காலாகும்
தூவு நல்ல முத்திரண்டாந் தூயதாக்கிக் கொள்ளுகவே ரு
கொண்டே யேலம் பலமொன்று குலவும் பதக்கு நீர்விட்டுச்
சுண்டக் காய்ச்சி யரைப்படிநீர் தொகுத்தே யெடுத்து நாலொன்று
நன்று யாட்டி யத்துடனே நலஞ்சே ரிலிங்க நாற்கழஞ்சு
கண்டேய் மொழியாய் கர்ப்பூரங் கஸ்தூ ரியுமே நாலாமே கூ
நாற்ப லந்தா னிஞ்சியதி னல்ல சாற்று ஞற்சாமம்
சாற்று மாதளம் பழவிரசந் தனிலே நாலு சாமமரை
தோற்றுந் தோடம் பழச்சாறு லவங்க வரைத்தே யுலர்ந்தபின்னர்
ஊற்றுநொச்சிச்சாறதனி லுறவாயிரண்டுபொழுதரையே எ
பொழுதே யிரண்டு போகியபின் பொன்னி னம்பர் கழஞ்சிரண்டு
பழுதே யொன்றும் வாராமற் பாவை பாலி னளிரண்டு
தொழுது சிவனே வழிபட்டுத் தோற்றும் பயறு போலுருட்டி
வழுவில் லாது நிழலுலர்த்தி வடிவாந்தங்கச் சிமிழில்வையே
வைப்பாய் பாண்ட மொன்றுக்குள் வளமாய்க் கறுப்பு நெல்லுருத்துக்
கைப்பாகந்தான்வழுவாமற் கணக்காயிருபதுநாள்வைத்துத்
தைத்தே யமிர்த மின்னூளைச் சரியா யெண்ணூள் பூசித்துப்
பைத்தேன்பாலுங்கரும்பிரசம் பருகத்தீராச்சுரம்போமே அ
சுரர்தாரகத்தைநொச்சிமலர் சொல்லுமிலுப்பைகுங்குமப்பூக்
கரவா மூயிற்று முட்டைபுடன் கஷாய மாக்கி மூலிப்பாலில்

சுரமார் சன்னி பலவுளவுக் தொலியுக் தோஷ சுரம்போகும்
பரமேயடைந்தோர்க்கன்னமிட்டோர்பாவம்போலாம்பொய்யாதே

[பிவைக்கு

பொய்யாஞ் சேற்ப முட்டடைப்புப் பொலிமேன் மூச்சோ டிளைப்
மெய்யாக்திப்பிலிதோடையிலை மேவுமரத்தைதூதுளம்வேர்
செய்ய குன்றி சிறுவட்டுச் சேர விட்டு வண்டவித்துத்
துய்யசாறுமூலிப்பால்தேன்றுலங்கக்கலந்துகுடிப்பதுவே ம

அனுபானமும் தீரும்நோயும் கூறும் செய்யுட்கள இன்னமும் முப்பத்தொன்றுக்கு மேலுள்ளன. தேடிப்பார்க்க என்று பிரதியில் எழுதப்பட்டிருக்கிறது.

கர்ப்பூராதிமாத்திரை.

சூடன், பச்சைக்கர்ப்பூரம், கோரோசனை குங்குமப்பூ, சாதிலிங்கம், வெள்ளைப்பாஷாணம், தீமுறுகல், நாவி, கோட்டம், மதுரம், இரசம், கராம்பு, திரிகடுகு—வகை—கழஞ்சு—கு. உள்ளிச்சாறு, இஞ்சிச்சாறு, வசம்புச்சாறு இவற் றுல் வகைக்கு ஒருநாளரைத்து மிளகளவுருட்டி நிழலுலர்த் தவும்.

பிரண்டை, வசம்பு, உள்ளி அரைத்து வெக்கீரிற் கலக்கி வடிகட்டிக் குளிகைகூட்டிக் கொடுக்கச் சன்னி-18-வலி-12 உட்குத்து, புறவீச்சு, சுவாதம், குளிர்வாதம், சேடப்பொ றுப்புத் தீரும். மூலிப்பாலில் மூட்டுமூச்சும் அநிமதாரக்க ஷாயத்தில் சரளியும், உள்ளித்தயிலத்தில் கண்டக்காப்பன் உள்ளடைப்புந்தீரும்.

நவலோக பூபதிமாத்திரை.

வெண்கலம், பித்தளை, செம்பு, தங்கம், வெள்ளி, நாகம், வங்கம், காந்தம், அயம்—வகை—பல—உ. சீனக்காரம், வெண் காரம், வெடியுப்பு, இரசம், கெந்தகம், மனோசிலை, அரிதா ரம், கௌரி—வகை-பலம்-க. எல்லாம் தனித்தனி நன்கு சுத்தி

செய்து சீதேவிச்சாறு, செருப்படிச்சாறு, கையாந்தகரைச் சாறு, இவற்றுல் வகைக்கு ஒருநாளரைத்து வில்லை செய்து கொள்ளவும்.

கொண்டிடு வில்லை குணமா யுலர்ந்தபின்
சென்றிடு மயானந் திறமுட னத்தி
எரிந்ததை யெடுத்தே யின்புடன் வெண்கரு
குணமுடன் விட்டரை கொண்டிடு மெழுகுபோல்
தவறின்றிக் கவசமாய்த் தான்செய்த பின்பு
வாயது குவிந்த கரகத்திற் கற்சுண்ணம்
பலமோ ராறு பரிவுட னிட்டுச்
செயம்பெறு வில்லை தீர்க்கமாய்வையே
வைத்தபின் மேலும் வலுவாய்ச் சுண்ணம்
இட்டமா யழுத்தி யீசர மூலி
அதனிற்சாறு
செயம்பெற விட்டுச் சீலையெழ் செய்து
நவரத்தி பூசை நலமுற முடித்துக்
கெசபுடம் போட்டுக் கிருட்டியின் பூசை
அன்புடன் செய்தே யாறி யெடுக்க
ஊகா வன்ன மூவப்புட னிருக்கும்
முத்துப் பவளம் முறைகரு சிவப்புப்
பத்திசே ரக்குப் பகர்மான் கொம்பு
குங்குமப் பூவும் கோரோ சனையும்
கஸ்தூரி பச்சைக் கர்ப்பூ ரிவைகள்
செப்பமா யொன்பான் சேர்நிறை யாக
இலிங்கசிக் தூர மெடிவகை மூன்று
கரும்புக் கஷாயம் விரும்பிவிட் டரைத்து
மாதுதன் பாலான் மறுநா ளரைத்துக்
கயிறுபோ லுருட்டிக் கனகச் சிமிழில்

பண்புள பூபதி பரிவுட னடையே
அடைத்திடு பூபதி பருகு யுரைக்கச்
சகத்துள மானிடர் செய்தவ மாமே
தவம்பெறு முனிவர் தம்மூ யெல்லாம்
விரும்பியே யாய்ந்து விளம்பினன் சேகரன்
காமுறு பூபதி கருத்துடன் மூலப்பால்
திறமுற வுரைத்தத் தீட்டிடு காலில்
கறைமிடற் றண்ணலைக் கருத்தி லிருத்திக்
கொண்டிட வெகுநோய் குதித்தப் பறக்கும்
உற்றிடு சன்னி யுள்ளன வெல்லாம்
பற்றிடு காசம் பகரீ ராறும்
சுற்றிடு சேற்பந் தொண்ணூற் றுமும்
அகத்துறு பித்த மடுத்திடு வாதம்
இத்தீ வகையு மிதனுற் போமே
பூபதி தன்னைப் பூதல முள்ளி
நாரியர் பாலி னலமுறு மதுவில்
நாளது மூன்று நாடியே யுண்ண
வாடிடும் வாயு வந்திடு மூச்சுத்
தேடிய வேர்வை சிக்கிரம் போகும்
அசாத்திய நோயை யாய்வது தகுமே
சார்ந்திடு பிணியைத் தவிர்த்திடு முண்மை
சேகரன் படையெதிர் திசையோர் போலும்
நாவினுற் சிவனது நாம நவிற்றும்
உத்தமர்க் கன்ன மூட்டிடு மேலோர்
பாவம் போகும் பரிசது போலும்
உடலுறு பிணியெலா மோடிடு மென்று
மறையுரை தேர்ந்து வழுத்திய நிதுவே

காந்த அமிர்தலிங்கமாத்திரை.

திருநிறை காந்தந் தங்கஞ் சிவந்திடு மிலிங்கந் தானும்
வருமுறை கழஞ்சு நான்கு வகுத்துநற் சம்பி ரத்தின்

மண்ம்பெறு புளிகாக் கொத்தில் வருவெடி யுப்பு காலு
குண்ம்பெற வூற் விட்டுக் குறிப்புட னரைக்கும் போது
நலம்பெறு வீரக் நாற்கழஞ் சிட்டுத்
தினமூன் றரைத்துத் நிரள்பதம் வில்லை
செயம்பெறவுலர்த்தி,
உமிக்கரி யுடனே யுறுவெண் கரம்
வெண்கரு விட்டரை வில்லைக்குக் கவசஞ்செய்
நன்ரு யுலர்த்தி நாதனீ நினைந்து
கெசபுட மிட்டெரி யாறி யெடுத்திட
அனிச்சம் பூப்போ லழகு தருமே
தருசெறி முத்துத் தலஞ்சேர் சிவப்புப்
பவளம் வெள்ளி பச்சைக் கர்ப்புரம்
காரகில் சந்தனங் கஸ்தித் தேவதா
ரேலங் கோட்ட மிசைசாதி பத்திரி
நிரிகடு காத்தை சேர்பழ மூன்று
வசுவாசி காகம் வருகஸ் தூரி
காவி யிருவி நற்குங் குமப்பூ
மான்மதம் பசுமத மயிர்க்கோ ரோசனீ
இந்துப் போடில் வங்க மென்றிவை
வகைக்கொரு கழஞ்சு வண்மையாய்ச் சேர்த்துப்
பன்னீர் விட்டுப் பகர்நாற் சர்மம்
மூலிப்பால் மூன்று சாமமு மரைத்துக்
கொடுவே லியினிற் குடிநீர் சாமம்
பயறுபோ லுருட்டி பண்புற வுலர்த்தே
உலர்ந்திடு மாத்திரை யொன்றினீ யெடுத்துச்
சிறந்திடு முலிப்பால் தேனதி லுண்ணப்
பொருந்திடு சன்னி புகன்றவெச் சுரமும்
நிறைந்திடு நாமுள் நீலக் கறுப்பும்
கரந்திடு சிங்குவை கடிய வாதமும்
நாடி தளர்தலுங் கலமிலாக் குளிரும்
இரவிமுன் னெதிர்த்த பனியெனப் போகும்
அகலும் பலவகை யான சுவாதமும்

நண்புள விஞ்சி நாரத் தம்பழம்
நறுந்தேன் கரும்பு நங்கை முலைப்பால்
காச விருமல் காயா சுவாதம்
தொடர்ந்த மூச்சுத் தொலையுமே பாலில்.

மிகுதி தேடிப்பார்க்க என்று பிரதியில் எழுதப்பட்டிருக்கிறது.

வெள்ளை வெண்காய லேகியம்.

குறுணிதரு மாப்பாலில் வெள்ளுள்ளி பலமாறு
கொண்டவித் தீருழக்குக்
கோநெய்யும் விட்டுக் கடைந்தேலமதுரங்
குலக்கா யவின்கராம்பு
மறுவில்செவ் வள்ளிமுக் கெந்தமுச் சீரகம்
வாசியில வங்கமோமம்
வான்மிளகு கோட்டமா யாக்காய் குறுசாணி
மாஞ்சில்வளர் நாகமுகையும்
திறிகடுக மக்கறுக் கடுகுரோ கணியுலுச்
செண்பகங் கஸ்தூரியுஞ்
சிறுமூலகஞ்சிற் றரத்தைகன் னாரிங்கு
செப்புதற் கோலமினிவேர்
நறியகண் டங்காலி சாரணை யமுக்கிரவு
நாயுருவி வாகைகோரை
நன்னாரி நிலவடலி தூதுவளை யோரொன்று
நவிலுங்க ழஞ்சுகொள்ளே
கொண்டுபா லினிலரைத் தேழுன்பு வெந்திடு
குழம்புடன் சேர்த்தெரித்துக்
கூறுதேன் னாழியிட் டேசீனி யுரியையுங்
கூட்டிலே கியபாகமாய்க்
கண்டபோ தேயெடுத் திருநேர மும்புனைக்
காயளவு நந்திவரவே
காமாலை யரிசலங் குத்திரும லுடலிற்
கடுப்புநீ ரெரிவுவழலை
ஆண்டுமே கஞ்சத்தி விக்கல்பிர மேகவகை
யங்கமெங்குஞ் சொறிதலு
மாறாத சுரமிருமல் பித்தவகை நாற்பதொ
டரிக்குமுட லிற்கிருமியும்

மிண்டுசேற் பனரோக மோங்காள மிவைதீரும்
வீரியவி ருத்திபெலமும்
மிகுமறிவு விழிமிக விளங்குமுடல் பூரிக்கும்
வெண்காய லேகியமிதே.

மிளகு சந்தனாதியெண்ணெய்.

மிளகு-படி-ச. இடித்துப்பதினாறுபடி தண்ணீர்வைத்து உ-படியாய் வற்றவைத்துப் பிழிந்து அதில் கையாந்தகரை, மாற்றுவெற்றிலை, துளசி, இயங்கு, அவுரி, முருக்கு, ஆடாதோடை, *குல்லை- இவை சாறு எலுமிச்சம்புளி, பால், இளநீர்-இவை-வகைக்குப் படி-க. நன்னாரி, இலாமிச்சு, முத்தற்காசு, சிற்றமட்டி, தூதுவளை, கண்டங்கத்தரி, சிறுகாஞ்சோன்றி—வகை-பலம்-க. திரிபலை-வகை-பலம்-உ. சுக்கு, கோட்டம், தேவதாரு, அகில், மரமஞ்சள், கஸ்தூரிமஞ்சள், செண்பகப்பூ, அதிமதுரம், பச்சை, சந்தனம், கச்சோலம், செவ்வள்ளி, ஏலம், இலவங்கம், திப்பிலிமூலம், சடாமாஞ்சில், பூலாங்கிழங்கு, அரிசிவகைஆறுவகை-பலம்-க. இடித்து வேர்வகை சரக்குவகை வெவ்வேறாய் ஆவித்துக் கலந்து நல்லெண்ணெயும்விட்டு எட்டுநாளூறி மெழுகுபதத்தில் வடித்து இளஞ்சூடாயிருக்கும்போது-குங்குமப்பூ, கோரோசனை, பச்சைக்கர்ப்பூரம், புனுகு-இவை-ஒருபடி எண்ணெய்க்கு ஒருகழஞ்சு வீதம் பொடித்துத் தூவவும். தானிய புடத்தில் ஒரு பட்சம்வைத்தெடுத்துத் தலைக்கு வைத்து நசியமும் செய்துவர- சிலேற்பனநோய் தொண்ணூற்றாறும், பீனிசம், மூக்குநீர்ப்பாய்ச்சல், தும்மல், அரிப்பு, சிராய்விழுதல், கபாலவலி, கனப்பு, பித்தம், கிறுதி, உட்டணம், உட்டணவாயு இவை தீரும். சிகைக்காய் வெந்நீரில் எண்ணெய் கழற்றி அன்று பால், தயிர் முதலியன நீக்கிப் பத்தியமிருக்க.

பெரிய முலைப்பாலெண்ணெய்.

உலகுதனி லேசிறுவர்க் குற்றகணை யாதி
பலபிணிக ணீங்கும் படிகேள்—முலையிலுறு
பாலதுவு நானாழி பண்புடைய நற்பசுவின்
பாலுமிரு நாழியுடன் பங்கயத்தின்—மூலம்
வருசாறு சீதேவி மன்னுமதன் சாறு

*குல்லை—கஞ்சா.

தருமிளநீர் காழியொன்று தாமும்—மருவவே
எள்ளெண்ணெய் காழியுமிட் டேற்ற கஷாயமதில்
வல்லபுக்கு சிற்றமட்டி மஞ்ளுடன்—சொல்லவே
முத்தமிரு வேலியொடு மொய்குழலே கன்னரி
வைத்த வமுக்கிரா யிலாமிச்சு—மெத்த
எடுமேலீ நார்கழஞ் சேற்றகடைச் சாக்குத்
தொடுமே பாரத்தை சுக்குச்—சடாமாஞ்சில்
பச்சைமர மஞ்சள் பகர்கடுகு ரோகணியும்
இச்சைதரு மேல மிலவங்கம—கச்சோலம்
நற்சி ரகில்குப்பை காகம்பூச் செவ்வள்ளி
அச்சமில் லாமதுர மத்தணியும்—மெச்ச
வகைக்குக் கழஞ்சொன்றுப் வாங்கியே வேர்கள்
அரைத்துக் கரைத்துவிடு மப்பால்—பருத்தொரு
சுத்தந் தணிச்சீவிச் சாருமறு பலமும்
இந்துவில்வ வேரு மிருபலமாய்க்—கொந்துளப
மாயன் றணிநிணந்து வாகாய்நற் பாண்டத்தில்
பூவையெண்ணழி புனலினைவிட்—டாவலுடன்
எட்டொன்றுய்க் காய்ச்சி யிறுத்துக் கஷாயமதில்
விட்டறநா ளுறி மெழுகுபதத்—திட்டமாய்
வட்டி லெடுத்து மகிழம்பூத் தான்பரப்பி
மட்டவிழ்கஸ் தூரி வருபுனுகு—சட்டமுடன்
கோரோ சனைவகுத்த குங்குமப்பூ மேற்றூவிச்
சீராய் வடித்துச் செயமபெறவே —காராணி
மாமுகனைப் பூசித்து வண்மையுறு பாலகர்க்கு
நேமமாய் வைத்து நினைவுடனே—சேமம்
தருசிகைக்கா யெண்ணெய் தணியகற்றப் பூசி
மருவுமிள வெங்நீரில் மூழ்க—ஒருவுபிணி
வாதசுரம் பித்தசுர மாரூத சேடசுரம்
வாதைசெயு மத்திசுரம் வாயவியல்—தீதாங்
கணியக் கரமதுவுங் கண்பீனி சாறல்
மணல்போலு காமுள் வரட்சிஅணியும்
கனநோய்க ளெல்லாங் கதிரவற்கண் டஞ்சும்
பனிபோலப் போகும் பறந்து.